



# புனித லூர்து மாதா தேவாலயம்

45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா
**பங்கு குருவானவர்: அருள் தந். ரோபட் டேனியல்**
**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**
Tel: 05-5279349 Fax: 05-5276671
அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org

**திருத்தந்தையின் கருத்து : சீனாவில் உள்ள திருஅவை நற்செய்தியில் அதன் விசுவாசத்தை நிலைநிறுத்தி ஒற்றுமையில் வளர மன்றாடுவோம்.**
**மார்ச் மாத கரு : கடவுள் உங்களுக்குள் தயவை கண்டடைந்துள்ளார்.**

## பங்கில் திருப்பலிகள் இல்லை

**14 மார்ச் (அல்லது வெள்ளிக்கிழமை வாரயிறுதி தொடங்கும் மாநிலங்களில் 13 மார்ச்) முதல் 29 மார்ச் 2020 வரை வாரயிறுதி மற்றும் வாரநாள் பொது திருப்பலிகள் அனைத்தும் இடைநீக்கம் செய்யப்படுகின்றன.** இது பள்ளி பொது விடுமுறையுடன் ஒத்துப்போகிறது. எனவே, இந்த காலகட்டத்தில் ஞாயிறு கடன் திருநாள் திருப்பலியில் உதவ வேண்டிய/ கலந்து கொள்ள வேண்டிய கடப்பாட்டிலிருந்து அனைத்து கத்தோலிக்கர்களுக்கும் நாம் விலக்களிக்கிறோம். இந்த விலக்களிப்பு தற்போதைய நெருக்கடியை எதிர்கொள்ள ஒரு தற்காலிக நடவடிக்கையே. இச்சூழ்நிலையை நாம் தொடர்ந்து கண்காணித்து, ஆய்வு செய்து, மேற்கூறிய காலகட்டமான 29 மார்ச் 2020க்கும் அப்பால் இந்த இடைநீக்கம் நீட்டிக்கப்பட வேண்டுமா என தீர்மானிப்போம். கோலாலம்பூர் மாமறைமாவட்ட சமூக தொடர்பு பணிக்குழு வாரயிறுதி திருப்பலிகளை பல்வேறு முக்கிய மொழிகளிலும், வாரநாள் திருப்பலிகளை ஆங்கிலத்திலும் ஒளிபரப்ப ஏற்பாடுகளை செய்து வருகிறது என்பதை தயவு செய்து கருத்தில் கொள்ளுங்கள்.

- இந்த காலக்கட்டத்தில் எல்லா மறைக்கல்வி வகுப்புகளும், மறைக்கல்வி நிகழ்ச்சிகள், நடவடிக்கைகளும் இரத்து செய்யப்படுகின்றன.
- இதே காலகட்டத்தில் ஆலயத்திலோ, அதிசக்களிலோ திட்டமிடப்பட்ட எல்லா கூட்டங்களும், ஒன்று கூடுதல்களும், உருவாக்கங்களும், RCIA அமர்வுகளும், தோழமை விருந்துகளும், நிகழ்ச்சிகளும் இரத்து செய்யப்படுகின்றன.
- ஏதேனும் திருமணங்கள் அல்லது அடக்கச் சடங்குகள் வரையறுக்கப்பட்ட உடனடி குடும்ப உறுப்பினர்களுடனும், நெருங்கிய நண்பர்களுடன் தனிப்பட்ட முறையில் நடத்தப்பட வேண்டும். மேல் விபரங்களுக்கு தயவு செய்து உங்கள் பங்கு குருவானவரை தொடர்பு கொள்ளவும்.
- ஆலயங்கள், சிற்றாலயங்கள் அல்லது செப அறைகள் (எது பொருத்தமானதோ), சம்பந்தப்பட்ட பங்குகளின் நேர அட்டவணைப்படி தனிப்பட்ட, சொந்த மன்றாட்டிற்காகவும், நற்கருணை ஆராதனைக்காகவும் திறந்திருக்கும். மேல் விவரங்களுக்கு பங்கு அகப்பக்கத்தையோ அல்லது பங்கு அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளவும்.

## ***தவக்கால மூன்றாம் ஞாயிறு (சிந்தனை)***

நமது வாழ்க்கையில் குறிப்பிட்ட சில வேளைகளில் நாம் சில இழப்புகளை அனுபவிப்போம். தாய்நாட்டை, செல்வத்தை அல்லது உயிரையே இழந்த உணர்வை நாம் அனுபவித்திருப்போம். இந்த இழப்புகளினால் நாம் மனோரீதியான வேதனையையும், துன்பத்தையும் சந்தித்திருப்போம். பல மனிதர்கள் நம்மை கீழே வீழ்த்திவிட்டார்கள் அல்லது கடவுள் நம்மை கைவிட்டு விட்டார் என நாம் உணர்வோம். ஒரு புறத்தில் நாம் விசுவாசத்தைப் பற்றிக்கொண்டு, எதிர்நோக்குடன் ஒளிமயமான எதிர்காலம் நமக்கு புதியனவற்றை பெற்றுத்தரும் என முன்செல்வோம். மற்றொரு புறத்தில், இழந்தவற்றை மீண்டும் பெறுவோம் என்ற எதிர்நோக்குடன் பழயனவற்றை தொலைத்த இடத்திற்கே மீண்டும் நாம் செல்லுவோம். விடுதலைபயணம் 17: 3-7, ஏறக்குறைய இதே உணர்வுகளை பிரதிப்பலிக்கிறது. இஸ்ராயேல் மக்கள் மிகவும் கொடுமையான துயரங்களை எகிப்தில் அனுபவித்திருந்தபோதும் அங்கேயே மீண்டும் திரும்பிட விரும்பினர். பாலைநில அனுபவத்துடன் ஒப்பிடுகையில், கடவுள் வாக்களித்த சுதந்திரம், மீட்பைவிட எகிப்தின் துயரங்களும், அடிமைத்தனமும் எவ்வளவோ மேலானது என உணர்ந்தனர். இந்த கட்டுப்பாட்டினால், அவர்கள் முறுமுறுத்தனர். அவர்கள் கடவுள் தங்களோடு இல்லை என்று கருதினார்கள். இது மோசே கடவுளின் தலையீடு வேண்டி மன்றாடச் செய்தது. நினைத்துப் பாருங்கள் — பாறையிலிருந்து தண்ணீர் சுரந்தது! மக்களின் முணுமுணுப்பு காரணமாக, இந்த இடத்திற்கு 'மாசா' (சோதித்தல் என்று பொருள்) என்றும் 'மெரிபா' (சண்டையிடுதல் என்று பொருள்) என்றும் பெயரிடப்பட்டது. இது ஒரு தற்காலிக தீர்வே, ஏனெனில் வாக்களிக்கப்பட்ட நிலத்திற்கு அவர்கள் இன்னும் நீண்ட பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. நமது வாழ்வில் கைவிடப்பட்டதாக உணர்வதால் நாம் முணுமுணுக்கிறோம், முறையிடுகிறோம், மகிழ்ச்சியில்லாததாய் உணர்கிறோம், அல்லது துயர நிலையில் இருக்கிறோம். நமக்கு ஏற்பட்டதை நினைத்து சுய துக்கத்தினால் அடைபட்டுக்கிடக்கிறோம். வாழ்வின் பழைய நிலைக்கு திரும்ப விரும்புகிறோம், எல்லாமே வழக்க நிலைக்கு திரும்ப ஆசைப்படுகிறோம். ஆனால் நாம் விடுதலையடைய, பாலைநிலத்தில் நாம் பயணிக்க வேண்டியிருக்கும். இதுவே சுதந்திரத்தையும், மீட்பையும் விரும்புவோரின் தேர்வாகும்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. 14 ~ 29 மார்ச் 2020 வரை வாரயிறுதி திருப்பலிகளும், வாரநாள் திருப்பலிகளும் ஒலிபரப்புதல்:** www.Tv.ArchKL.org நேரடி ஒளிப்பரப்பை பார்க்கவும்.

**ஞாயிறு —** காலை 7.30க்கு **தமிழில்** திருப்பலி, காலை 9.00க்கு **சீன மொழியில்** திருப்பலி, காலை 10.30க்கு **ஆங்கிலத்தில்** திருப்பலி, மதியம் 12.00க்கு **மலாய் மொழியில்** திருப்பலி,

**வாரநாள்கள் —** மாலை 6.00க்கு **ஆங்கிலத்திலும்,** மாலை 7.00க்கு **மாலாய் மொழியிலும்** திருப்பலி

**2. உறுதிபூசுதல் ஆதரவாளர்களுக்கான அமர்வு:** மேலும் அறிக்கை வரும் வரை 29 மார்ச் 2020 (ஞாயிறு)க்கான அட்டவணை ஒத்திவைக்கப்படுகிறது.

**3. மறைக்கல்வி வகுப்புகள்:** 15 மார்ச் 2020 ~ 12 ஏப்ரல் 2020 வரை மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் வகுப்புகள் எப்பொழுது தொடங்கும் என பெற்றோர்கள் அறிக்கைத்தாளின் வழியாக தெரிந்துக்கொள்ளவும்.

**4. திருஉருவசிலைகள்:** உங்களிடம் திருஉருவசிலைகள் நிறங்கள் மங்கிய நிலையில் உள்ளனவா? உடைந்த திருஉருவசிலைகளை பழுதுபார்க்க வேண்டுமா? புனித ரூபஸ் அதிச அவர்களின் 2020 நிதி திரட்டும் திட்டமாக திருஉருவசிலைகளை பழுதுபார்த்து அதிலிருந்து கிடைக்கும் பணம் அனைத்தும் ஆலய பழுதுபார்ப்பு & சீரமைப்பிற்கு சேரும். உங்கள் திருஉருவசிலைகளையும், உங்களின் விவரங்களையும் பங்கு அலுவலகத்தில் கொடுக்கவும். முடிந்தபிறகு (ஒரு மாதத்திற்குள்) பழுதுபார்ப்பிற்கான நிபந்தனை தொகையை செலுத்திவிட்டு திருஉருவசிலைகளை பெற்றுக்கொள்ளவும்.

5.

| திருமுழுக்கு 2020 | 2020 ஆங்கில நிகழ்வுகள் | 2020 தமிழ் நிகழ்வுகள் |
|---|---|---|
| 14 மார்ச் 2020 (ஆ) | ஜூன் 5 - 7 ~ பினாங்கு | மே 22 -24 ~ புனித அன்னம்மாள் விடுதி, புக்கிட் மெர்தாஜாம் |
| 9 மே 2020 (த) | செப் 4 - 6 ~ பினாங்கு | ஆக 28- 30 ~ புனித அன்னம்மாள் விடுதி, புக்கிட் மெர்தாஜாம் |
| 11 ஜூலை 2020(ஆ) | நவ 20 - 22 ~பினாங்கு | நவ 27 -29 ~ புனித அன்னம்மாள் விடுதி, புக்கிட் மெர்தாஜாம் |
| 19 செப் 2020 (த) | எல்லா ஆங்கில வாரயிறுதிகளும் ஸ்டெல்லா மேரிஸ், பினாங்கில் நடைபெறும். இந்த நிகழ்வுகள் வெள்ளி மாலை தொடங்கி ஞாயிறு மாலை நிறைவடையும். தயவு செய்து பங்கு குருவானவரை சந்தித்து பதிவு பாரங்களை பெற்றுக்கொள்ளவும். | |
| 14 நவ 2020 (ஆ) | | |

**புலூமா ஏழைகளுக்கான உணவு (2009ல் நிறுவப்பட்டது):** உணவு திட்டம்: புதன்/ வியா மதியம் 12.45 ~ 1.45 வரை First Garden மெதுவோட்ட பாதை (Jogging Track) பெகோர் அடுக்குமாடி வீடு அருகில் செயல்படுகிறது.

**நம்பிக்கை மையம்**: நம்பிக்கை மையம் ஞாயிறு காலை 10.30 ~ மதியம் 12.00 மற்றும் செவ்வாய் & வியா காலை 10.30 ~ மதியம் 12.00/ மாலை 5.30 ~ மாலை 7.00 வரை திறந்திருக்கும்.

**நிதி பொறுப்புடைமை:** பங்கு குருவானவரிடமிருந்து எழுத்துபூர்வமான அனுமதி இல்லாமல் ஏதேனும் நிதி உதவி பெற யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. என் பெயரை பயன்படுத்தி யாரேனும் பணம் கேட்டால் அவர்களை பொறுட்படுத்தாதீர்கள். இம்மாதிரியான எந்த வித நிதி மோசடிக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன். இம்மாதிரியான பிரச்சனைகள் இருந்தால் உடனடியாக என்னையோ/ பங்கு அலுவலகத்தையோ தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அனைத்து நன்கொடைகளும் பங்கு அதிகாரப்பூர்வமான ரசீதுகளால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**சிற்றாலயம் மற்றும் பங்கு நிதி பிப்ரவரி 2020 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம் - ரிம 486,711.28
அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் - ரிம 561,392.22 ஆலய பழுதுபார்ப்பு & சீரமைப்பு - ரிம 488,732.05
(மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**08/03/20 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,207.65 **காலை 9.00** - RM 1,964.00 **தாசேக்** – RM 176.30
**மொத்தம்**- RM 3,347.95 **2020** - RM 655.00 **ஆலய பழுதுபார்ப்பு & சீரமைப்பு**- RM 2,137.85

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம்.
காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்